குழந்தைகளுக்குப் பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழ்நாடு மாறிவிட்டது!

குழந்தைகளை வைத்து ஓட்டு வாங்கி ஆட்சிக்கு வந்த விஜய் எங்கே போனார்?

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கேள்வி!





சென்னை, அக்.26

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள், நேற்று (25.10.2026) விடுத்த வலைதளப்பதிவில், "குழந்தைகளுக்குப் பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழ்நாடு மாறி விட்டது!" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அப்பதிவில் "குழந்தைகளை வைத்து ஓட்டு வாங்கி ஆட்சிக்கு வந்த விஜய் மாமா எங்கே?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது ட்விட்டர் பதிவு வருமாறு:-

செஞ்சியில் காணாமல் போன ஏழு வயதுச் சிறுமியை 14 நாட்களாகியும் கண்டுபிடிக்கவில்லை.

வேளாங்கண்ணிக்குச் சென்ற இரண்டு சிறுமிகளை விடுதியில் அடைத்துப் பாலியல் வன்கொடுமை செய்ததாக வெளியாகியுள்ள செய்தி நெஞ்சைப் பதறவைக்கிறது.

சாத்தான்குளத்தில் இரு சிறுமிகள் கடத்தப்பட்ட நிலையில், ஒரு சிறுவன் அரிவாளால் வெட்டுப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

கோவையில் சாதிய வன்கொடுமையால் 11ஆம் வகுப்பு மாணவர் உயிரை மாய்த்துக் கொண்டார் . மறுபுறம், கோவை அரசு மருத்துவமனையில் டெங்கு காய்ச்சலுக்குச் சிகிச்சை பெற்றுவந்த நான்கு வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இப்படி எல்லா வழிகளிலும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழ்நாடு மாறிவிட்டது. குழந்தைகளை வைத்து, ஓட்டு வாங்கி ஆட்சிக்கு வந்த விஜய் மாமா எங்கே போனார்?

இவ்வாறு அப்பதிவில் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



எஸ்.ஆர்.எம். குழுமத்தின் தலைவர் டாக்டர் ரவி பச்சமுத்து இல்லத் திருமண விழாவில் ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி. கலந்துகொண்டு மணமக்கள் ஹரிணி ரவி – விக்ரம் பெரியசாமி குமார் ஆகியோரை வாழ்த்திய போது எடுத்த படம்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மதுரை வருகை!

மதுரை வடக்கு மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, அக்.26-

வருகிற 30ஆம் தேதி தேவர் திருமகனார் குரு பூஜை மற்றும் மருது சகோதர்கள் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதற்காக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 29 ம் தேதி மதுரை வருகை குறித்து ஆலோசிக்க மதுரை வடக்கு மாவட்ட திமுக செயல்வீரர்கள் கூட்டம் வருகிற 27 ம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை வருமாறு:-



வருகிற 30ஆம் தேதி தேவர் திருமகனார் குரு பூஜை மற்றும் மருது சகோதரர்கள் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த 29 ம் தேதி மாலை மதுரைக்கு விமானம் மூலம் வருகை தரும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்பது தொடர்பாக மதுரை வடக்கு மாவட்ட திமுக செயல்வீரர்கள் கூட்டம் அவைத்தலைவர் எம்ஆர்எம்.பாலசுப்ரமணியன் தலைமையில் 27.10.2026 ஆம் தேதி காலை 10 மணிக்கு திருப்பாலையாதவா மகளிர் கல்லூரி அருகில் அமைந்துள்ள குறிஞ்சி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மதுரை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்ற வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

துறைமுகம் மேற்குப் பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர்

எஸ்.கணேசன் (எ) ஜோசப் - க.தேவி (எ) ஆஸ்நாத் இல்லத் திருமண வரவேற்பு!

பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ, வாழ்த்துகிறார்! பிரியா ராஜன் – தயாநிதி மாறன் – கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை, அக். 26 -

கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் மற்றும் கழக இளைஞர் அணிச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல் வாழ்த்துக்களுடன் சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர் கொத்தவால் சாவடி எஸ். கணேசன் (எ) ஜோசப் - க.தேவி (எ) ஆஸ்நாத் ஆகியோரின் புதல்வி க.கனிமொழி (எ) எப்சிபாக்கும், சென்னை, கொளத்தூர் டி.செல்லையா (எ) மேனியல் - செ.அமுதா (எ) ஷீபாராணி ஆகியோரின் புதல்வர் செ.பிரசாந்த் (எ) ரூபனுக்கும் திருமண வரவேற்பு விழா இன்று (26.10.2026 - திங்கட்கிழமை) மாலை 6.30 மணிக்கு, சென்னை, பெரவள்ளூர், ஜி.கே.எம். காலனியில் உள்ள பேரறிஞர் அண்ணா திருமண மஹாலில் நடைபெறுகிறது.

துறைமுகம் மேற்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார்.

எஸ்.இராஜசேகர், ஐ.சி.எஃப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், கோ.சு.மணி, ப.ஸ்ரீராமுலு, இசட்.ஆசாத், வி.சுதாகர், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, இரா.கலைச்செல்வி, எம்.இப்ராஹிம் கனி, பா.ஜெகதீஷ், எம்.வினாயகம், மு.பி.விஜயகுமார், பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், பா.அண்ணாதுரை, எஸ்.புகழேந்தி, மு.செல்வகுமார், கே.ஆர்.அபரஞ்சி, டி.போஸ், டி.எஸ்.சேகர், பூக்கடை வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.



57 (அ) வட்டக் கழக நிர்வாகிகள் ஜி.துளசிராமன், டி.வேலு, கே.பவானி, ஆவின் சந்திரசேகர், பா.முத்துக்குமார், கேபிள் சங்கர், ஜெயின், ரூபாராம் பட்டேல், நா.மோகன், கே.ஜெய் பிரகாஷ், எல்.சாந்தி லால், எஸ்.அசோக் ஜெயின், பா.நடராஜன், டி.சேகர், ஆர்.வேலாயுதம், சு.அண்ணாதாசன், பண்ணை ஜி.மோகன், குட்டி (எ) சிவகுமார், எம்.சாய் பவன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இவ்விழாவில் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, ப.தாயகம் கவி, துறைமுகம் காஜா, இரா.கிரிராஜன் எம்.பி, ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, ஜோசப் சாமுவேல், கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராஜ், கே.சந்துரு கி.மகேஷ்குமார், டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், கூ.பி.ஜெயின் எம்.சி, வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, டாக்டர் சாந்தகுமாரி எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, பி.கே.மூர்த்தி எம்.சி, வி.பரிமளம் எம்.சி, ராஜேஷ் ஜெயின் எம்.சி, நாஹா நவீன் எம்.சி,

வானவில் விஜய், நா.துலுக்கானம், எம்.பெரோஸ்கான், ராஜா முகமது, இரா.வீரமணி, எல்.பி.எப்.மோகன், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், புரசை ஜி.தாமோதரன் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி, சி.காந்தி, தேவகானம் ராஜா, எம்.கவியரசன், எம்.சாமுவேல், மு.செல்வகுமார், பி.தம்பி ராஜா, எம்.சாரதி, எம்.ஜெகன், பி.இளைய ராஜா ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

விமானத்திற்கான எரிபொருள் வரியைக் குறைத்து

த.வெ.க. அரசு கார்ப்பரேட் அரசாகச் செயல்பட்டு வருகிறது!

முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி!

சிவகங்கை அக். 26.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாமன்னர் மருதுபாண்டியர்களின் 225வது ஆண்டு குருபூஜை விழாவில் பங்கேற்ற முன்னாள் தொழில் துறை அமைச்சர் தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் டி.ஆர்.பி.ராஜா செய்தியாளர்களிடம் கூறியதாவது.



முதல்வராக விஜய் பொறுப்பேற்ற நாளிலிருந்து கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள், வன்முறை சம்பவங்கள் தினசரி நடைபெற்று வருகின்றது. கடந்த ஐந்து மாத ஆட்சியில் வன்முறை சம்பவங்கள் நடைபெறாத நாட்களே இல்லை.

விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது .ஒரு மாதத்தில் அரிசி விலை ரூபாய் 40 உயர்ந்துள்ளது.பாமாயில், பருப்பு போன்ற மற்ற பொருட்கள் விலைகள் அதிக அளவில் உயர்ந்துள்ளது. இதனால் ஏழை, எளிய, சாதாரண சாமான்ய நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார் கள். ஆட்டோ ஓட்டுனர்கள் தொழிலாளர்கள் மிகவும் வருத்தமாக உள்ளார்கள் .இதைப் பற்றி எல்லாம் முதல்வர் விஜய்க்கு கவலை இல்லை. மாறாக அவர் விமானத் திற்கான எரிபொருளுக்கான வரியை குறைத்து உள்ளார். கார்ப் பரேட் அரசாக த.வெ.க. அரசு செயல்பட்டு வருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன் சிவகங்கை பஸ் நிலையம் முன்பாக இந்த அரசிடம் விதவைப் பெண்மணி உதவி கேட்டு தனது குழந்தையுடன் ரோட்டில் புரண்டு படுத்து அழுதது மிகவும் பரிதாபமாக நெஞ்சை உருக்கும் வகையில் இருந்தது. இத்தகைய சம்பவம் எங்கும், எப்பொழுதும் நடைபெற்றதில்லை.

இதையெல்லாம் முதல்வர் விஜய் அவர்கள் கண்டு கொள்ளவே இல்லை.

இந்த அரசு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது. விஜயை நம்பி வாக்களித்த மக்கள் ஏமாற்றத் துடன் உள்ளார்கள்.

இவ்வாறு டி.ஆர்.பி. ராஜா கூறினார்.

தலைமைக் கழகப் பிரதிநிதிகள் அன்னியூர் சிவா – பா.அப்துல்மாலிக் முன்னிலையில்

திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!

திருவள்ளூர், அக்.26-

திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயற்குழுக் கூட்டம் (29102026 வியாழன் கிழமை அன்று மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதிகள் அன்னியூர் சிவா, பா.அப்துல்மாலிக் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.



இதில் காலை 10 மணி அளவில் பட்டாபிராம் ஜெய் கீரிஷ் மஹாலில் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கூட்டமும் - காலை 11.30 மணியளவில் ஹோட்டல் ஹைவே ஜெயினில் பூவிருந்தவல்லி சட்ட மன்றத் தொகுதிக்கு உட்பட்ட கூட்டமும் நடைபெறுகிறது.

இக்கூட்டங்களில் மாவட்டத்திற்குட்பட்ட முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மாநகர ஒன்றிய, நகர, பேரூர், பகுதி செயலாளர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் தவறாமல் பங்கேற்றுச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: கழக மறுசீரமைப்புப் பணி மற்றும் கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு ஆவடி சா.மு.நாசர் தெரிவித்துள்ளார்.



இராயபுரம் மேற்குப் பகுதி, 48வது வட்டம், இளைஞர் அணி பாக அமைப்பாளர் பி.பிரவீன் இல்ல மணவிழாவில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, பகுதிச் செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், வட்டச் செயலாளர் இரா.பாலன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

வங்கக்கடலில் உருவாகும் புயல்:

5 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் !

சென்னை.அக்.26-

வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி. காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது மேலும் வலுப்பெற்று அக்டோபர் 26-ஆம் தேதி புயலாக மாறக்கூடும் என்றும், அக்டோபர் 28-ஆம் தேதி மிகத் தீவிரப் புயலாக ஆந்திர பிரதேச கடற்கரையைக் கடக்கக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இன்றும் (அக்டோபர் 25) கனமழை முதல் அதி கனமழை வரை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

குறிப்பாக புதுக்கோட்டை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதி கனமழை பெய்யக்கூடும் என்பதால் ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை உள்ளிட்ட வடதமிழக மாவட்டங்களிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் அதையொட்டிய தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, சனிக்கிழமை (அக்டோபர் 24) மாலை 5.30 மணியளவில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது.

அப்போது விசாகப்பட்டினத்தில் இருந்து கிழக்கு-தென்கிழக்கே சுமார் 820 கி.மீ. தொலைவில் மையம் கொண்டிருந்த இந்த அமைப்பு, அடுத்த ஆறு மணிநேரத்தில் மணிக்கு 8 கிலோமீட்டர் வேகத்தில் தென்கிழக்கு திசையில் நகர்ந்துள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட சமீபத்திய அறிவிப்பின்படி, சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில் இந்தக் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் விசாகப்பட்டினத்தில் இருந்து 860 கி.மீ. தொலைவிலும், காக்கிநாடாவில் இருந்து 950 கி.மீ. தொலைவிலும், மச்சிலிப்பட்டினத்தில் இருந்து 1,060 கி.மீ. தொலைவிலும் நிலைகொண்டிருந்தது.

நேற்று (அக்டோபர் 25) இந்த அமைப்பு தெற்கு நோக்கி நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது.

பின்னர் படிப்படியாக மேற்கு-வடமேற்கு திசையில் திரும்பும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

அதன்பிறகு வடமேற்கு திசையில் நகர்ந்து அக்டோபர் 28ஆம் தேதி காலையில் மிகத் தீவிரப் புயலாக ஆந்திர பிரதேச கடற்கரையை நெருங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அக்டோபர் 28-ஆம் தேதி முற்பகலில் ஆந்திர பிரதேசம் மற்றும் ஏனாம் கடலோரப் பகுதிகளில், பாடலூராவுக்கும் விசாகப்பட்டினத்திற்கும் இடையே இந்தப் புயல் கரையைக் கடக்கக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அப்போது மணிக்கு 115 முதல் 125 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். இடையிடையே காற்றின் வேகம் மணிக்கு 140 கி.மீ. வரை அதிகரிக்கக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஆந்திர பிரதேசம் மற்றும் அதை ஒட்டிய தெற்கு ஒடிஷா கடலோரப் பகுதிகளுக்குப் புயல் உருவாவதற்கு முந்தைய மஞ்சள் நிற முன்னெச்சரிக்கையையும் இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், திருச்சி, கரூர், நீலகிரி, கோவை, திருப்பூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களிலும் காரைக்கால் பகுதியிலும் ஓரிரு இடங்களில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, விருதுநகர், கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களிலும் புதுச்சேரியிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

மழையின்போது சில பகுதிகளில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இன்று அக்டோபர் 26-ஆம் தேதி சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, தேனி, மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, கரூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

அக்டோபர் 27-ஆம் தேதி ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

அக்டோபர் 28-ஆம் தேதி தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை வரை பெய்ய வாய்ப்புள்ளது. தமிழகத்தின் பெரும்பாலான பிற பகுதிகளில் மழையின் தீவிரம் குறையக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.